**UNIVERSITY OF PERADENIYA**

**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

**ශාස්ත්‍රවේදී උපාධි (බාහිර - නව නිර්දේශය) පරීක්ෂණය 300 මට්ටම - 2023**

**இளங்கலைமாணிப் பட்ட பரீட்சை (வெளிவாரி-புதிய பாடத்திட்டம்) 300வது தேர்ச்சி மட்டம்-2023**

**Bachelor of Arts (External - New Syllabus) Examination 300 Level – 2023**

**தமிழின் செவ்விலக்கியங்கள்**

# TLGE 301 – CLASSICAL LITERATURE IN TAMIL

කාලය පැය (03) තුනයි.
**03 மணித்தியாலங்கள்**
Time three **(03)** Hours.

නොපැහැදිලි අත් අකුරුවලට ලකුණු කපනු ලැබේ.
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
Marks will be deducted for illegible hand writing.

ප්‍රශ්න ---05--- ට පිළිතුරු සපයන්න.
முதலாம் வினா உட்பட எவையேனும் 05 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
Answer --05---- questions only.

මෙම ප්‍රශ්න පත්‍රයේ අඩංගු ප්‍රශ්න සංඛ්‍යාව----08------- කි
இந்த வினாப்பத்திரத்தில்- 08 ---- வினாக்கள் உள்ளன.
There are 08 questions in the question paper.

---

1. பின்வரும் செய்யுட்களின் இலக்கியச் சிறப்பினை விளக்குக.

அ).

கால்பார் கோத்து ஞாலத்து இயக்கும்
காவற் சாகாடு உகைப்போன் மாணின்,
ஊறுஇன்று ஆகி ஆறுஇனிது படுமே!
உய்த்தல் தேற்றான் ஆயின், வைகலும்
பகைக் கூழ் அள்ளற் பட்டு,
மிகப்பல தீநோய் தலைத்தலைத் தருமே!

ஆ).

வான் கடற் பரப்பின் தூவற்கு எதிரிய,
மீன் கண்டன்ன மெல் அரும்பு ஊழ்த்த,
முடவு முதிர் புன்னைத் தடவு நிலை மாச் சினை,
புள் இறை கூரும் மெல்லம் புலம்ப!
நெய்தல் உண்கண் பைதல கலுழ,
பிரிதல் எண்ணினை ஆயின், நன்றும்

அரிது உற்றனையால் – பெரும ! உரிதினின்
கொண்டு ஆங்குப் பெயர்த்தல் வேண்டும் – கொண்டலொடு
குரூஉத் திரைப் புணரி உடைதரும் எக்கர்ப்
பழந் திமில் கொன்ற புது வலைப் பரதவர்
மோட்டு மணல் அடைகரைக் கோட்டு மீன் கெண்டி,
மணம் கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளம் கெழு தொண்டி அன்ன இவள் நலனே.

2. புறநானூற்றில் இடம்பெறும் பொருண்மொழிக் காஞ்சித் துறை சார்ந்த செய்யுள்கள் பற்றிக் கருத்துரை வழங்குக.

3. சங்ககால அகத்திணைச் செய்யுள்மரபு பற்றி விளக்கி, அம்மரபு அகநானூற்றுச் செய்யுட்களில் இடம்பெறுமாற்றினைத் தெளிவுபடுத்துக.

4. சங்க கால மருதத்திணை வாழ்வியற் கூறுகளை ஐங்குறுநூற்றின் வேழப்பத்துப் பாடல்கள் புலப்படுத்துமாற்றினை விளக்குக.

5. "சிலப்பதிகாரத்தின் உயிர்நிலை கானல்வரி" - இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

6. பண்டைய தமிழரின் போரியல் வாழ்வும், சேர மன்னர்களின் வரலாறும் பத்திற்றுப்பத்துப் பாடல்களில் வெளிப்படுமாற்றினை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

7. "திருவள்ளுவரின் திருக்குறள் அற இலக்கியங்களில் தலையாயது" இக்கூற்றை, ஒழிபியல் பகுதியில் நீர் கற்ற அதிகாரங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.

8. நாலடியார் பாடல்கள், தனிமனித வாழ்வை நெறிப்படுத்தும் ஒழுக்கவியல் சிந்தனைகளை எடுத்துரைக்குமாற்றினை விபரிக்குக.